ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ते मोहिता स्तद्वशेवर्तमाना इतः प्रेता स्तत्रपुनः पतन्ति ।
ततस्तान्देवा अनुपरिप्लवन्ते अतोमृत्युर्मरणादभ्युपैति॥

(அஹங்காராதிகளில்) மோஹங்கொண்ட அவர்கள் இந்த மிருத்தியுவின் வசத்திலிருக்கிறவர்களாகி இங்கிருந்து பரலோகஞ்சென்று, (அங்கிருந்து இங்கு) மறுபடியும் விழுகிறார்கள். பிறகு (விழுந்த) அவர்களை இந்திரியங்கள் (கர்மாவை) அனுஸரித்துச் சுற்றிக்கொள்கின்றன. இதனால் மரணமும், அம் மரணத்தினால் (ஜன்மாவும்) ஏற்படுகின்றது

நித்தியனாய் ஸர்வத்திலும் நிறைந்து, அச் சர்வ வஸ்துக்களையும் பிரகாசிப்பித்து உள்வெளியின்றி சுயம்பிரகாசித்துக்கொண்டு விளங்கும், அகண்ட ஞானானந்தவடிவமாயுள்ள தன்னாத்மாவை உள்ளபடி உணராமல் அஹங்காராதிகளுடன் கூடி கர்த்தாவாய் தேஹேந்திரியாதிகளை நானென்றும், அவற்றின் ஆச்ரம தர்மகர்ம குணாதிகளை என்னுடையதென்றும் அபிமானித்துப் பூர்வ வாஸனைக்குத் தக்கபடி புண்யாபாப கர்மங்களைச் செய்து அக் கர்மானுஸாரமார்க்கமாய் ஊர்த்வ அதோலோகங்களில் போவதும் வருவதுமாய் அலைந்து திரிந்து நானாவித விசித்திர யோனிகளில் ஜனனமெடுத்து ஜாக்கிரஸ்வப்னாதி அவஸ்தைகளையடைந்து சுக துக்கங்களாகிற அக் கர்மபலனைப் புஜித்து மறுபடியும் மரணமுற்று ஸம்ஸார ஸாகரத்திலுழலுகின்றஜீவர்களுக்கு ''நான் ஜீவனன்று, அவனுக்கும் ஸாக்ஷியாய் பிரகாசிக்கும் அகண்ட பரிபூரண பிரும்மமே நான்'' என்ற பிரும்மாத்மைக்ய ஞானம் எப்போது உண்டாகுமோ? அப்போதுதான் நான் என்னுடையது என்ற அத்தியாஸமெல்லாம் அடியோடு விலகிவிடுமாதலால் அமிருதத்வம் அனைவருக்கும் ஸ்வபாவஸித்தம். மரணம் என்பதும் தேஹாதிகளின் பொய்க்கூட்டுறவால் ஏற்பட்டதேயொழிய எதார்த்தமானதன்று ஸித்தம். ஆகவே அகங்காராதி நாசத்திற்காக ஆத்மஸ்வரூபவிசாரம் அவச்யம் செய்யவேண்டும்.

சுபம்

V. J. S.

ஆர்ய தர்மம்.
ஆங்கிரஸ-ஹூ புரட்டாசி-மீ ௭௨

மதமும் அதன் பயனும்.

பிரிய வாசகர்களே?

தற்காலத்தில் நாம் விரும்பத்தக்கது மதமொன்றுதானாகும். அதை எதுமுதல் நாம் விரும்புவதின்பொருட்டு முயற்சி எடுத்துக் கொள்ளுவோமோ? அதுமுதல்தான் நம்மவருள் ஒற்றுமையும் சாந்தியும், பரோபகார சிந்தனையும், புராதன கல்வித் திறமையும் அபிவிருத்தியடையும். நம் புத்திக் கூர்மையால் கண்டுபிடிக்கப்பட்ட தத்துவங்களையெல்லாம் மதமென்ற சொல்லுக்கு அர்த்தமாக அங்கீகரிக்கத் தகாது. ஏனெனின் பிரதி மனிதனுக்கும் புத்தி வெவ்வேறு உண்டாதலால் மதமும் வெவ்வேறாக சிதறுண்டு சீர்குலைந்துவிடும். அதையனுஸரித்துக்கொண்டு ஏற்படவேண்டிய ஒற்றுமை முதலிய பொதுப் பிரயோஜனங்களும் கைகூடாமல்ப் போய்விடும். ஆகவே பதவாக்கியப் பிரமாணக்ஞர்களாக விளங்கும் நம் முன்னோர்களாகிய பெரியோர்கள் சாஸ்திரப் பிரமாணவாயிலாகக் கையாண்டுவந்த கொள்கைகளைத்தான் மதம் என்ற சொல்லுக்குப் பொருள் உரைக்கவேண்டும். இவ்விதமாக இவ் விஷயத்தை ஸ்மிருதியும் கூறுகின்றது.

सर्वप्रमाणतत्त्वज्ञैः सद्भिर्लोकहितेरतैः ।
शास्त्रानुसारि निर्णीतं यत्तन्मतमुदाहृतम् ॥

என்றவாறு இப்படிப்பட்ட மதத்தைப் பின்பற்றுவதால் இம்மையில் சுகவாழ்வுமட்டுமன்றி மறுமையிலும் பேரின்ப வாழ்வு ஏற்படும். ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனி ஸ்வபாவம் அமைந்திருப்பதுபோல் மனிதஸமூஹ வடிவமாயுள்ள இவ் வுலகங்களுக்கும் தனித்தனி ஸ்வபாவமிருப்பதால் அதனையனுஸரித்து மதங்களும் வேற்றுமைப்பட்டு விளங்குகின்றன. இதனால் ஒருதேசத்துக்கு ஏற்பட்ட மதமானது இன்னொரு தேசத்துக்கு ஒற்றுமையு

டன் ஏற்கக்கூடியதாயிராது. எந்த காரியத்தைத் தடைப்படாமல் எவருக்குச் செய்ய ஸாமர்த்தியமுண்டோ? அவர்கள்தான் அக் காரியங்களைச் செய்யவேண்டுமேயன்றி மற்றவரல்ல.

இனி ஐந்து கண்டங்களிலிருக்கும் மேனாட்டு மனிதர்களுங்கூட ஏன் வைதிக கர்மங்களை அனுஷ்டிக்கலாகாது? பகவானால் ஸிருஷ்டிக்கப்பட்ட மனிதரெல்லோருமொரே வகையாயிருக்க எல்லா வைதிக கர்மங்களையும் எல்லோருக்கும்பொதுவாகச் சொல்லாமல் பிராம்மணாதி ஜாதிபேதங்களை வகுத்து அவர்கள்மட்டும் அவற்றைச் செய்யவேண்டும் என்று நியமம் கூறுவது பாரபக்ஷமானதன்றோ? என்று தற்காலத்தில் பலர் சங்கை செய்வதுண்டு.

இது உண்மையில் உசிதமில்லை என்று நன்கு புலப்படும். பகவானோ, மஹரிஷிகளோ பாரபக்ஷமுள்ளவர்களாக இருந்து கொண்டு சாஸ்திரங்களை இயற்றவில்லை. ஆனால் ஜீவராசிகளின் பூர்வ பரம்பராக்ரமம் தேசம் காலம் முதலியவைகளின் நிலைமை, ஆகாரம், அறிவு, பரிபாகம், நடையுடைபாவனைகளுக்குத் தக்கபடி கர்மாக்களை போதித்திருக்கின்றனர். ஆகவே பூர்வ பரம்பராக்கிரமத்தை நோக்கி அனாதிகாலமாக வருணாச்ரமாதி தர்ம பேதங்களை விதிக்கும் சாஸ்திரங்களுக்கு பாரபக்ஷமிருப்பதாக நினைப்பது உசிதமில்லை.

தற்கால நிலைமையை நோக்கும்போது வைதிக கர்மாக்களைச் செய்யவேண்டிய முக்கிய அதிகாரிகளாகிய ஆர்யர்களுக்கே அவைகளைச் செய்ய அஸாத்தியமாயிருக்கும்போது எல்லா மனிதரும் அவைகளைச் செய்யவேண்டுமென்பது எப்படி இயலும்.

ஆகையால்தான் கீதாசார்யாள் **परधर्मो भयावहः** என்று ஸாரமாக உபதேசித்துள்ளார். இதனால் மதமூலமாகத்தான் நாம் ஒற்றுமையடையவேண்டும் என்பது விளங்குகிறது.

நமக்கோ மதாபிமானம் அனேக ஆண்டுகளாக அடியோடு அற்றுப்போய்விட்டது. அதன் பயனும் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

ஆர்யர்களே!

ஆசாரங்களைக் கைவிடாதீர்கள். உங்களுக்கு இயன்றவரையில் செய்யுங்கள். அதுவே போதுமானது. பூர்ணமாய் அனுஷ்

டிக்க முடியாமலிருப்பதைக் குறித்து வருந்துங்கள். பகவான் பூர்ண சக்தியை அளிப்பார் என்பது நிச்சயம்.

தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் நடந்த போரில் முடிவில் யாருக்கு ஜெயமேற்பட்டது. தேவர்களுக்குத்தான். அதுபோல் பூதேவர்களாகிய நமக்குத்தான் முடிவில் ஜயம் என்பது நிச்சயம் இதற்கெல்லாம் மதாபிமானந்தான் மூலகாரணமென்பதை ஒரு போதுமறக்கலாகாது. சுபம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

புருஷார்த்தக்கிரமம்.

(889-ம் பக்கத்தொடர்ச்சி)

அவ்விதம் ருஜுவாகாததால் ராஜசிக்ஷை ஏற்படாமல் போனாலும்

धर्मार्थसन्निपाते अर्थग्राहिणएतदवे ।

"தர்மசாஸ்திரம் அர்த்தசாஸ்திரம் இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள இடத்தில் தர்மசாஸ்திரத்தைக் கிரஹிக்காது. அர்த்தசாஸ்திரத்தை அனுஸரித்தவனுக்குக் கீழ்க்கூறியபடி பனிரண்டுவர்ஷ ஸாத்யமான பிராயச்சித்தந்தான்" என்று ஆபஸ்தம்ப மஹர்ஷி கூறியபடி குருவான பிராயச்சித்தத்தால் விலகவேண்டியதும் யார் லௌகிகமான பிரபல துக்கத்திற்கு ஹேதுவுமான மஹத்தான பாபம் ஸம்பவிக்கும் அதற்கு ருஜுவில்லாமல் போகாது. ஸர்வபிராணிகளுடையவும் புண்ணிய பாபங்களை அவ்வப்பொழுது ஸர்வாந்தர்யாமியாய் ஸர்வஸாக்ஷியாயிருக்கும் பகவான் அறிந்துவிடுகிறபடியால் ருஜு ஏற்பட்டுவிடும். அர்த்த சாஸ்திரத்தைக் காட்டிலும் தர்மசாஸ்திரம் பிரபலமென்பது காம சாஸ்திரத்திற்கும் உபலக்ஷணம். அதாவது தர்மசாஸ்திரத்திற்கும் காமசாஸ்திரத்திற்கும் விரோதம் ஏற்பட்டால் காமசாஸ்திரத்தை அனுஸரித்து ஸ்வேச்சையாய் விஷய ஸுகங்களை அனுபவிக்காது தர்மசாஸ்திரத்தையே அனுஸரிக்கவேண்டும் தர்மசாஸ்திரம் பிரபலமானதால் என்று கருத்து. ஆகவே தர்மசாஸ்திரத்திற்கு விரோதமில்லாத பிராசீன ஆயுர்வேதத்தில் கூறிய ஔஷதங்களைப்

புஜித்துச் சரீரபுஷ்டி முதலியதைச் செய்துகொண்டு அறிவித்த விஷய சுகங்களை அநுபவிக்காமல் தர்மசாஸ்திர விருத்தமான ஸுரை முதலியதின் ஸம்பந்தமுள்ள டானிக் முதலிய நவீன ஔஷதாலயங்களில் கொடுக்கப்படும் நவீன ஔஷதங்களைப் புஜித்துச் சரீரபுஷ்டியைச் செய்துகொண்டு சாஸ்திர நிஷித்த விஷய சுகங்களை இஷ்டப்படி அநுபவிப்பது கூடாது என்பது இதனால் முடிவாயிற்று.

இதுவரையில் கூறியதால் தர்மமே பிரதானமாதலால் அதற்கு விரோதமில்லாத அர்த்தகாமங்களே நல்லது அதுதான் விவேகிகளால் கிரஹிக்கத்தக்கது தர்மத்திற்கு விரோதமுள்ள அர்த்தகாமங்கள் கெட்டது அது கிரஹிக்கத்தக்கதல்ல என்று ஏற்பட்டது. அவ்வித கெட்ட அர்த்தகாமங்களை விலக்கி நல்ல அர்த்தகாமங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று காட்டுவதற்காகவே தர்மத்திற்கும் மோக்ஷத்திற்கும் நடுவில் அர்த்தகாமங்கள் புருஷார்த்தக் கிரமத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அவ்விதம் கூறப்பட்டதால் இந்த அபிப்ராயம் எவ்விதம் விளங்குகின்றதென்றால் கூறுவோம். ஒரு விஷயத்தை ஓரிடத்தில் ஆரம்பத்திலும் முடிவிலும் கூறினால் நடுவிலுள்ள வாக்யங்களுக்கும் அதே விஷயத்தில்தான் கருத்தென்று கொள்வது உபக்ரமோபஸம்ஹார ந்யாயம் என்று பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்திரங்களில் பிரஸித்தமானதால் அந்த நியாயத்தை அனுசரித்து நல்லதான தர்மம் மோக்ஷம் இவைகளை ஆரம்பத்திலும் முடிவிலும் புருஷார்த்தக்கிரம வாக்யத்தில் கூறியிருப்பதால் அவ் வாக்யத்தில் நடுவில் கூறப்பட்ட அர்த்த காமங்களும் நல்லதாகவேதான் இருக்கவேண்டும். நல்லதை ஆரம்பித்து முடித்தால் நடுவில் உள்ளதும் நல்லதாகவே இருக்கவேண்டுமன்றோ இது.

तन्मध्य पतितस्तद्ग्रहणेन गृह्यते।

"அதன் நடுவில் உள்ளதும் அதன் பெயரால் வழங்கப்படும் தாதுவின் மத்தியில்வந்த ஆகமமும் தாதுவென்றே கூறப்படும்" என்கிற வியாகரண சாஸ்திரத்தின் நியாயத்தையும் ஒத்திருக்கிறது. அந்த நியாயப்பிரகாரம் நல்லதுகளுடைய மத்தியில் வந்ததும் நல்லதென்றே அழைக்கப்படவேண்டுமன்றோ?

மேலும் தர்மத்தை ஆரம்பத்திலும் மோக்ஷத்தை முடிவிலும் அர்த்தகாமங்களை நடுவிலும் கூறினதால் ஆரம்பத்தில் தர்மத்திற்கு

விரோதமில்லாததும் முடிவில் மோக்ஷத்தை அடைவதற்கு இடையூறாகாததுமான அர்த்தகாமங்களைக் கிரஹிக்கவேண்டுமென்று உற்றுநோக்குவார்க்குப் புலப்படுகிறதன்றோ?

தர்மத்தைக் கூறியபிறகு மனதில் அதற்கு விரோதமில்லாத அர்த்த காமங்களை அடுத்தாப்போல் ஸ்பரிக்குமானதாலும் இவ் விஷயம் புலப்படுகிறது.

இன்னும் துவாரபாலகனுடைய விரோதமுள்ளவன் எவ்விதம் உள்ளே பிரவேசிக்கமுடியாதோ அவ்விதமே புருஷார்த்தங்களுக்குள் துவாரபாலகஸ்தானத்தில் முதலிலிருக்கிற தர்மத்திற்கு விரோதமுள்ள கெட்ட அர்த்தகாமங்கள் புருஷார்த்த வரிசைக்குள்ளே பிரவேசிக்கமுடியாதென்பது உசிதம்தான்.

மேலும் நல்லதோடு நல்லதுதான் சேறும். ஆகையால் நல்லதான தர்மமோக்ஷங்களுடன் சேர்ந்த அர்த்தகாமங்களும் நல்லதுதான். இவ்விதம் கெட்ட அர்த்தகாமங்களுடன் சேர்ந்த தர்ம மோக்ஷங்களும் கெட்டதுதான் என்று மாறிச்சொல்லுவதற்கு இடமில்லை. ஏனெனில் தர்ம மோக்ஷங்களுக்குள் கெட்டது என்று ஓர் பிரிவு கீழ்க்கூறியபடி சொல்லுவதற்கு இடமில்லையல்லவா?

ஆகையால் நல்ல அர்த்தகாமங்களைக் கிரஹிக்கவே இவ்விதம் புருஷார்த்தக் கிரமம் கூறப்பட்டது.

தர்மம் காமனையுடன் செய்யப்பட்டால் முதல்முதல் அர்த்தத்தையும் அதன்பிறகு அதன்மூலமாகக்காமத்தையும் கொடுத்துவிட்டு அத்துடன் ஒழிவடைந்துவிட்டாலும் காமனையில்லாமல் செய்யப்பட்டால் ஆனுஷங்கிகமாக முதல்முதல் அர்த்தத்தையும் அதன்பிறகு அதன்மூலமாகக் காமத்தையும் கொடுத்து அத்துடன் ஒழிவடையாது கடைசியில் மோக்ஷ ஸாம்ராஜ்ய ஸுகத்தையும் வரிசையாகக்கொடுத்து எல்லா புருஷார்த்தங்களுக்கும் மூலஸ்தம்பமாக இருந்துகொண்டு உதவுகின்றபடியாலும் அதன்பிறகு வரிசையாகவே அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகள் ஏற்படுகிறபடியாலும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்கிற புருஷார்த்தக்கிரமம் ரொம்பவும் அழகாக அமைந்திருக்கிறதென்று உற்றுநோக்கும் எந்த புத்திசாலிகளும் இவ்வித கிரமத்தை ஏற்படுத்தி வியவஹரிக்கும் சாஸ்திரங்களினுடையவும்

பெரியோர்களான முன்னோர்களுடையவும், கம்பீரமான அபிப்பி ராயத்தைச் சிலாகிக்காமலிருக்கமுடியாதென்பது எனது துணிபு. இவ்விதம் புருஷார்த்தங்களின் கிரமத்தை உள்ளபடி ஒருவன் ஆராய்ச்சி செய்தால் எந்தெந்த புருஷார்த்தத்தை என்னென்ன விதமாக உபயோகப்படுத்தவேண்டுமென்று புலப்பட்டுவிடுமான தால் அவன் கெட்டமார்க்கத்தில்போகாது நல்லமார்க்கத்திலேயே போகும்படி நேரிடுமென்று உத்தேசித்தே இதை முதலில் எழுதி னேன். இத்துடன் இவ் விஷயம் முடிந்துவிட்டது. இனி புரு ஷார்த்தங்களை மனுஷ்யன் அவச்யம் ஸம்பாதிக்கவேண்டியது என்கிற விஷயத்தை அடுத்தாப்போல் கூறுகிறேன்.

சுபம்.

போலகம், சு. ஸ்ரீ ரரம சாஸ்திரிகள்.

ஸ்ரீ பகவத்கீதையும், வர்ணாச்ரம தர்மமும்.

894-ம் பக்கத் தொடர்ச்சி)

இதிலிருந்து இன்னொரு முக்ய துர்வாதமும் பதிவளிக்கப் பட்டுவிட்டது. அதாவது—

கீதை 9-வது அத்யாயம் 30-வது சுலோகத்தில் பகவான்

“ஒருவன் எவ்வளவு துராசாரனாக இருந்தாலும் என்னையே பஜித்தானாகில் அவன் நல்லவனென்றே நினைக்கத்தக்கவன்” என்று சொல்லுவதால் பகவத் பக்தனுக்கு வர்ணாச்ரமாநுஷ்டானம் வேண்டியதில்லையென்று ஏற்படுவதாகதிருத்தக்கார்கள்கூச்சலிடு வதும் அநுசிதமென்று நிச்சயிக்கப்பட்டது. ஷை சுலோகத்தின் உண்மை நோக்கமென்னவென்பதை முதலில் கவனிக்கவேணும். “எவ்வளவு துராசாரமுள்ளவனாகிலும் என்னைப் பஜிக்கவேணு மென்றும், அதனால் அவன் நல்லவனாகிவிடுவா” னென்றும் சொல்லி பகவத்பக்தியின் மஹிமையை இந்த சுலோகம் விவரிக்க வந்ததேயல்லது துராசாரனாகஇருக்கலாமென்று விதிக்கவரவில்லை. அப்படி அர்த்தங்கொண்டால் கீழே நாம் காட்டியபடி கீதையில் 18 அத்யாயங்களிலும் பகவான் வற்புறுத்திச்சொல்லிய கர்மாநுஷ்

டானங்கள் யாவும் நிர்கதிகளாகிவிடுமே? "துராசாரனுக இருந்த போதிலும்" என்கிறதில் காணப்படுகிற அபி என்பதையும் கவனிக்கவேணும். அபி என்பது அர்த்தவாதம் அல்லது அதிவாதத்திற்கு அடையாளமென்று சாஸ்திரக்ஞர்களால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது अपिवामातरं போன்ற பலவிடங்களில் ஸ்பஷ்டம். "மாத்ருகமனம் செய்தாலும் செய்யலாம். தேவதாஸியிடம் பிரவேசிக்கலாகாது" என்கிறவிடத்தில் எப்படி மாத்ருகமனம் விதிக்கப்பட்டதாகக் கொள்ளமுடியாதோ அதுபோல் இங்கும் துராசாரனுக இருக்கலாமென்று விதிக்கப்பட்டதாகக் கொள்ளமுடியாது. தவிரவும் இங்கு அவனை "துராசார"னென்று நிந்தை தோன்றும்படி குறிப்பிட்டிருப்பதிலிருந்தும் பகவானுக்கு அதில் அதிருப்தி வெளியாவதும் நன்கு தெரிகிறது. ஆகவே இந்த துர்வாதமும் தப்பு.

ஆகவே, பிராம்மணனுக்கு ஆறு கர்மங்களுடன் சமதமாதி கர்மங்களும், க்ஷத்திரியனுக்கு சூரத்தன்மை, யுத்தம், பிரஜா ரக்ஷணம் முதலியவைகளும், வைச்யனுக்குகிருஷி, கோரக்ஷணம், வியாபாரம் முதலானவைகளும், சூத்ரனுக்கு பரிசர்யை அல்லது ஊழியமும் ஸ்வதர்மமாக கீதையில் சொல்லப்பட்டிருப்பதாலும், அவரவர்கள் தம தம் தர்மங்களை யனுஷ்டிப்பதினுலேயே மோக்ஷாதிகளை அடையக்கூடுமென்று ஸ்பஷ்டமாகத் தெரிவதாலும், நமது நவீனநாகரிகர்களின் வர்ணுச்ரம விபரீதவாதமானது நிர்மூலமானதென்றே நிச்சயிக்கலாகும்.

இப்படிக் கீதையில் ஜாதிப் பிரிவும், ஜாதி தர்மங்களும் வரையறுக்கப்பட்டிருந்தும் சில நவீன மேதாவிகள் சூத்ர ஜாதியினருக்குக் கீதையில் பிராம்ஹணுதிகளுக்கு ஸமமாகத் தர்மங்கள் விதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லி ஏமாற்றிவருவது அதிக்ரமமேயாகும். ஆகையால் அதைப்பற்றி எழுதுவது ஆவச்யமாகிறது. கீதையில் சூத்ரர்களின் ஜாதி தர்மத்திற்கு மாருக எவ்விதச் சலுகையும் அவர்களுக்குக் காட்டப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. தாழ்ந்த ஜாதியினரிடம் கருணையால் அவர்களைஉயரத் தூக்கிவிட விரும்புகிறவர்களின் கண்ணுக்குக்கூட கீதையில் இவ் விஷயம் புலப்படக்கூடியதாகவில்லையே! கீதையில் ஜாதி தர்மங்களைச் சொல்லுமிடத்தில் சூத்ரர்களுக்கு 'பரிசர்யை,' அதாவது ஊழியம்

ஸ்வதர்மமாகவும்,ஜீவனமாகவும் விதிக்கப்பட்டிருக்கிறதே யல்லது யக்ஞ அத்யயனாதிகள் விதிக்கப்படவில்லை. 18-வது அத்யாயத்தில் நான்கு வர்ணங்களுக்கும் சில தர்மங்கள் சொல்லப்பட்டன வாயினும், அவைகளுடன் கீதையின் அபிப்பிராயப்படி இதர சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிற மற்றதர்மங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீதேசிகாதிகள் அங்கு நிர்ணயித்தார்கள். ஆகையால் சூத்ரர்களுக்கு பரிசர்யை என்கிற தர்மத்துடன் இன்னும் பல தர்மங்களும் வ்ருத்திகளும் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருப்பதையும் சேர்த்துக்கொள்ள வேணும். அவைகள் என்னவென்பதை ஸ்ரீதேசிகனும் அங்கு தாத்பர்ய சந்திரிகையில் பிரமாணங்களுடன் விவரித்திருக்கிறார்.

சூத்ரர்கள் நல்வழிநின்று மோக்ஷாதிகளை அடையவேண்டுமென்பதில் நமது ரிஷிகளைப்போல் கவலைகொண்டவர்எவருமில்லை. அவர்களுக்கு மூன்று வர்ண பரிசர்யையுடன் ஸத்யம், சௌசம், ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்கள், பஞ்ச யக்ஞங்கள், சிரார்த்த கர்மா தேவார்ச்சனம் முதலியபல தர்மங்கள் மந்திரமன்றியோ அல்லது நமஸ்காராதிமந்த்ரங்களைக்கொண்டோ அவச்யாநுஷ்டேயங்களாக விதிக்கப்பட்டிருக்கின்றன. ஜீவனத்திலும் ஊழியம் என்பதில் சிற்சில வியாபாரத்தைத் தொழிலிலும், க்ருஹ நிர்மாணம், வஸ்திர நிர்மாணம், வைத்யம், நாட்டியம் முதலான பற்பல சில்பங்களும் அடங்கியவைஎன்றும்,இவைகளை மூன்றுவர்ணத்தினரும் செய்து கொடுப்பதே அவர்களுக்குச் செய்யும் ஊழியமென்று நினைக்க வேணுமென்றும் ஸ்ரீதேசிகன் விவரித்திருக்கிறார். சூத்ரர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயமானது செய்துள்ள உபகாராதிசயங்களை அவ்வோ கிரந்தங்களில் விஸ்தாரமாகக் காணலாம்.

ஆகவே சூத்ரர்களுக்கு மோக்ஷம் கிடையாதென்று யாரும் சொல்லவில்லை. ஆனால் அதற்காக அவர்களுக்கு அதிகாரமில்லாததான கர்மயோக, பக்தியோகாதிகளை அவர்கள் ஆசரிக்காவிடினும் தனது தர்மத்தைச் சரிவர அனுஷ்டிப்பதினாலேயே லகுவாக மோக்ஷத்தை அடைந்துவிடலாமென்று ஸ்ரீகீதையில்பகவான் பலவிடங்களில் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறார். "எவனும் தன் கர்மத்தினாலேயே பகவானை ஆராதித்து மோக்ஷமடைகிறான்" என்று

முடிவாக 18-வது அத்யாயத்தில் சூத்ரனுக்குஊழியத்தை விதித்த மறு சுலோகத்திலேயே சொல்லுகிறார் பகவான். ஆகவே மோக்ஷமென்பது எவ் வர்ணத்தினருக்குமுண்டு. ஆனால் அதை அடையும் வழியானது ஒவ்வொரு அதிகாரிக்கும் ஒவ்வொருமாதிரியாக கீதைமுதலான சாஸ்திரங்களால் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தந்த வழியிலேயே அவனவன் செல்லமுடியும். வேறு வழி சென்றால் நரகாதிகளிலேயே கொண்டுபோய்விடும். சூத்ராதிகளுக்கு வேத மந்த்ரங்களை உச்சரிப்பதுபோன்ற சில விஷயங்களில் அதிகாரமில்லாதது ஒரு குறைவாகாது. பிராம்ஹணாதிகள் அத்யயனம், யக்ஞம், கிருச்ரம், தபஸ் முதலிய கஷ்ட ஸாத்யமான பல கார்யங்களால் அடையக்கூடிய மோக்ஷாதி ஹிதங்களை சூத்ரர்கள் தங்களது தர்மங்களான பரிசர்யாதிகளால் லகுவாக அடைந்துவிடலாமென்பது ஸர்வ சாஸ்த்ரநிஷ்கர்ஷமாகும். ஆகையால் கீதையில் உபதேசிக்கப்பட்ட பக்தியோகாதிகளில் சூத்ரர்களுக்கு அதிகாரம் கிடையாதேன்பதே கீதையின் உபதேசமாகும். தவிர மோக்ஷத்திற்கு ஸாதனமாகச் சாஸ்திரங்களில் நிர்ணயிக்கப்பட்ட பக்தி பிரபத்தி என்கிற இரண்டுவழிகளில் பக்தி என்கிற மார்க்கத்தில் சூத்ரர்களுக்கு அதிகாரமில்லாவிடினும் பிரபத்தி என்கிற மற்றொரு வழியில் அந்தணர், அந்தியர் உள்ளிட்ட அதிகாரிகளனைவருக்கும் அதிகாரமுண்டென்று கீதையிலும் மற்றவிடங்களிலும் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் சூத்திரர்களுக்கு பிராம்மணாதிகளுடைய வழியைப் பின்பற்றவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை, ஆகையால் திருத்தக்காரர்கள் கீதையில் சூத்ரனுக்கு வேதாதிகாராதிகள் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுவது வஞ்சனைவார்த்தையேயாகும். இதிலிருந்து கீதையில் எல்லாப் பிராணிகளிடமும், அன்புகாட்டும்படியும் எங்கும் ஸம திருஷ்டி செய்யும்படியும் சொல்லப்படுவதைக்கொண்டு திருத்தக்காரர்கள் சூத்ர சண்டாளாதிகளிடம் வர்ணாச்ரம விரோதமான ஸ்பரிசாதிக் கலப்புகளைக் கீதை அநுமதிப்பதாகப் பேசுவதும் அடிபட்டுப் போகிறது. வர்ணாச்ரமதர்ம விரோதமில்லாமல் எல்லாப் பிராணிகளிடமும், அன்பும், ஸம புத்தியும் செய்யக் கீதை உபதேசிக்கிறதேயல்லது வேறில்லை, எல்லாப் பிராணிகளிடமும் ஸம புத்தி செய்வதும் ஆத்மாவைப்பற்றினவரைக்குமேயன்றி சரீராதிகளைப்

பற்றியதல்லவென்பது முதலானவைகளை விஸ்தார பயத்தினால் இங்கு விவரிக்காமல் விடுகிறோம்.

சூத்ரர்கள் ஊழியம் செய்வதென்பது அடிமைத்தனத்தைக் காண்பிவிப்பதாகாது. பிராம்மணக்ஷத்திரியஜாதியினரும் தங்களது தர்மங்களைச் செய்வதால் உலகிற்கு ஊழியம் ஒருவாறு செய்துவருவதாகவே சாஸ்திரங்களின் கருத்தாகும். பிராம்மணர்கள் தங்களது நித்யகர்மானுஷ்டானாதிகளால் தைவங்களை ப்ரீதி செய்து எல்லா பிராணிகளும் க்ஷேமமடையவேணுமென்றும், காலத்தில் மழை பெய்து தேசம் ஸுபிக்ஷமாயும் ரோகமற்றதாயுமிருக்கவேணுமென்றும் பிரார்த்திக்கிறார்கள். இது அவர்கள் அனுஷ்டிக்கும் ஒவ்வொரு கர்மங்களிலும், வேதமந்திரங்களிலும் ஸ்பஷ்டமாயிருப்பதை அறியலாம். ஆகவே இதுவும் ஒரு ஊழியம் தான். ஆகையால் தான் அரசர்கள் ஸ்வதர்மத்தை விட்ட பிராம்மணனை சிக்ஷிக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். இதுபோல் க்ஷத்திரியர்கள், வேட்டை யுத்தம் முதலியவைகளுடன் பிரஜைகளின் ஆயுராரோக்கியாதிகளுக்குஜவாப்தாரிகளாயிருந்துபிரஜாபரிபாலனம் செய்வதும் ஊழியமன்றோ? இதுபோல் சூத்ரர்களும் பற்பல சில்பவித்யைகளாலும் வைத்யம் முதலானவைகளாலும் உலகத்திற்கு ஊழியம் செய்வது எப்படி அடிமைத்தனமாகும்? அதை ஸ்வதர்மமென்று தர்மசப்தத்தை யிட்டல்லவோ சாஸ்திரம் வ்யவஹரிக்கிறது. நாகரிகம் முதிர்ந்து விட்டதாகக் கருதப்படும் இக்காலத்தில்கூட பொதுஜனங்களுக்குப்பல வழிகளிலும் இலவசமாக ஊழியம் செய்வதற்கென்றே ஆங்காங்கு அனேக சங்கங்களும் ஸபைகளும் ஏற்பட்டு இதில் எல்லா வர்ணத்தினரும் பெரிய அந்தஸ்துள்ளவர்களுள்பட மாணாக்கர்கள் வரையில் யாவரும் சேர்ந்து ஸமூக ஊழியம் செய்வதைப் பெரிய கௌரவமாகவும் தர்மமாகவும் நினைத்துச் செய்யவில்லையா? இதை அடிமைத்தனமென்று ஏன் நினைக்கவில்லை? இம்மாதிரி தர்மத்தை சாஸ்திரம் விதித்தால் மட்டும் அது அடிமைத்தனமென்று பேசுவது விஷமச் செய்கையேயன்றி வேறில்லை.

(தொடரும்)

உ

தஞ்சை ஜில்லா

ப்ராம்மணர் ஸநாதன தர்மஸம்ரக்ஷண சங்கம்.

ஆங்கீரஸவஹ ஆவணி-மீ 20உ [4-9-32] சென்ற ஞாயிற்றுக்கிழமைதினம் தஞ்சை **ஆர்யமதபாடசாலைக்** கட்டிடத்தில் ஷை ஸங்கத்தின் வர்ஷாந்தப் பொதுக்கூட்டம் கூடியது.

தற்காலத்தில் தமிழ்நாட்டில் நாடகக் கம்பெனியெல்லாம் 'ஸபை' என்று பெயர்கொண்டிருப்பதால்இச்சபையின் **பெயரை** 'ப்ராப்மணர் ஸநாதன தர்ம ஸம்ரக்ஷண **ஸங்கம்**' என்று மாற்றப்பட்டது. அதன்மேல் சில விதி திருத்தப்பாடுகள் செய்து கொண்டு நிர்வாஹஸபையங்கத்தினர்களைத்தேர்ந்தெடுத்து ஸங்கத்தின் வர்ஷபூர்த்தி, பாடசாலை வர்ஷபூர்த்தி, ஸம்மேளனம் இம்மூன்றையும் ஒரே காலத்தில் நாளது செப்டம்பர்மீ 17,18உ களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

மறுபடியும் சாரதா சட்டத்தைக் கண்டித்து ராஜாபஹதூர் ஜி. கிருஷ்ணமாசாரியார் முதலிய அஸெம்பிளி மெம்பர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாக்களை ஆதரித்து தீர்மானங்கள் செய்யப்பட்டன. அதன்மேல் ஆர்யமத பாடசாலை நிரந்தரமாய் நடக்கவேண்டியதன் பொருட்டு திரவியம் சேர்க்க லாட்டரிச் சீட்டு முதலிய பல யோஜனைகள் செய்தபின் முடிவில் பிரும்மஸ்ரீ டி. எல். சுப்பய்யர் அவர்கள் ப்ராம்மண ஸமூகம் கவனிக்கவேண்டிய சில முக்கிய அம்சங்களைப்பற்றி பேசி முடித்தார்கள்.

தஞ்சை
ஆங்கிரஸவஹ ஆவணிமீ 21உ

க. லெ. லக்ஷ்மண சாஸ்திரிகள்
காரியதரிசி.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

நரகாஸுரவதம்.

1. பகவான் ஸமுத்ரத்தில் முழுகிய பூமியைத்தூக்க வராஹாவதாரம் செய்தாரல்லவா? பூமி அவர் தன்மேல் பட்டவுடன் அவரைக்கண்டு ஆசைகொண்டாள், ஆசை ஸரியானபடி இல்லாததால் அவளுக்குஓர் அஸுரக்குழந்தை பிறந்தது. அதற்கு நரகன் என்று பெயர்.

2. ப்ராக்ஜ்யோதிஷம் என்ற பட்டணத்தில் அவன் வஸித்தான். அவன் ஊரை எவரும் பிடிக்காமலிருக்கும்படி மலைகளைக் கோட்டையாக அமைத்தான். ஸமுத்ரத்தையே அகிழாகக் கொண்டான். அதிலும் எவரும் நுழையாதபடி முரன் என்ற அஸுரனைப் பாசமாக்கினான்.

3. எதைக் காப்பாற்றினால் இஃதெல்லாம் அழியாதோ அதை மறந்தான். அஃதென்ன? அதுதான் தர்மம்! அதைவிட்டு அதர்மத்தைச் செய்துவந்தான். இவன் பலத்தைக்கண்டு தேவரும் அஞ்சினர். இவன் தேவலோகம் சென்றான். அதிதியின் குண்டலத்தை அபஹரித்தான்.

4. அதிதி இந்திரன்தாயல்லவா? அவள் புத்ரனைக் க்ருஷ்ணனிடம் அனுப்பினாள். த்வாரகையிலுள்ள பகவானை அவன் சரணமடைந்தான். உனக்கு யாதுவேண்டுமென்று வாஸுதேவன் கேட்டான். இந்த்ரன் நரகனைக்கொன்று குண்டலங்களைக் கொடுக்கும்படி கூறினான்.

5. க்ருஷ்ணன் பரிவாரத்துடன் கிளம்பினார். முரன் ஆறுயிரம் வலைகளால் வழியைத் தடுத்தான். அவைகளை அறுத்து முரனையும் கொன்றார். ஆதலால் அவருக்கு முராரி என்று பெயர் உண்டானது. நரகனது கோட்டையான மலைகளைப் பிளந்தார். ஹயக்ரீவனைக் கொன்றார்.

6. நாகனுடன் யுத்தம் செய்தார். முடிவில் சக்ராயுதத்தால் நாகன்தலையை அறுத்தார். பூமிதேவி பகவானிடம் வந்தாள். அதிதியின் குண்டலங்களை அவரிடம் தந்தாள். அவள் புதல்வனான பகதத்தனைக் காக்கவேண்டும் என்றாள். பகவானும் அப்படியே அவனை ரக்ஷித்தார்.

7. நாகன் கர்வத்தினால் தேவர்களைத் துன்புறுத்தினான். அதனால் அவன் அழிந்தான். ஆயினும் பகவானது கையால் அடிபட்டான். ஆதலால் அவனுக்கும் நற்கதி கிடைத்தது. திவ்ய சரீரம்பெற்றான். பகவானைப் பணிந்து துதித்தான். ஸ்வாமி அவனிடம் ஸந்தோஷங்கொண்டார்.

8. உனக்கு என்ன வரம் வேண்டுமென்றார். அவன் தான் இறந்த தினத்தை உலகெலாம் உத்ஸவமாகக் கொண்டாடவேண்டும். அன்று காலையில் எண்ணெயில் லக்ஷ்மியும் வெந்நீரில் கங்கையும் வரவேண்டும். அன்று காலையில் எண்ணெதேய்த்துக்கொள்வோர் கங்காஸ்நானபலனைப் பெறவேண்டும்.

9. அன்று பகவானைப் பூஜிப்போர் நற்கதி பெறவேண்டுமென்றான். அங்ஙனமே பகவான் வரம்தந்தார். மற்றநாளில் காலையில் ஸ்நானம் எண்ணெஸ்நானம் செய்தால் மஹாபாபம். அந்தப் பாபத்திற்கு ப்ராயச்சித்தமே கிடையாது. நாகன் இறந்த தினம் சதுர்த்தசி திதியாகும்.

10. ஆதலால் அதற்கு நாகசதுர்த்தசி என்றுபெயர் வந்தது. தீபத்தினால் அன்று அலங்காரம் செய்வதுண்டு. ஆதலால் அதற்கு தீபாவளி என்று பெயர்வந்தது. அன்று பகவானை நினைத்துப் பூஜிப்போர் நற்கதி பெறுவர். நாகனைப்போல் பிறர் பொருளைக் களவாடாதே! கர்வங்கொள்ளாதே! பகவானைப்போல் பரோபகாரம் செய்.

வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

கைவிடாதீர்கள். 3வ கட்டாக் என்றவிடத்தில் சாரதா சட்டப்படி ஓர் வழக்கு தொடரப்பட்டது. தம்பதிகள் சம்பந்திகள் புரோஹிதர் ஆகிய இவர் கோர்ட்டுக்கிழுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களைச் சிக்ஷிப்பது நிச்சயம். நாளைக்கு நடக்கும் இதேகதிதான். இப்போது இந்திய சட்டஸபை நடக்கிறது. சாரதாசட்டத்தை ஒழிக்கவும் வைதிகர்களை அதிலிருந்து விலக்கவும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஊரூராகக் கூட்டம் போட்டு தெரிவித்தால் இம்முயற்சி பயன்படும். அரிய ஸமயத்தை ஆஸ்திகர் கைவிடலாகாது.

சென்னை நகரஸபையின் பக்தி. 6வ ஷை ஸபை சென்னைக்கு ஸ்ரீ பகவத்பாதாள் அநுக்ரஹம் செய்யும்போது 100ரூ. செலவு செய்து ஓர் வரவேற்புப்பத்திரமளிப்பதாகத் தீர்மானித்தது. பல இனத்தவர்கூடிய ஷை ஸபை எல்லாமதங்களுக்கும் ஆசார்யாளான ஸ்ரீ ஜகத்குருவை வரவேற்பதும், அதிலும் ஏகமனதாக அது எல்லோராலும் ஏற்கப்பட்டதும் சாலவும் சிறந்ததே. லௌகிகவகையில் நடக்கும் இது எவ்வளவு தூரம் ஸ்ரீபரமாசார்யாளின் அருளைப் பெருமென்பது பின்னாறியத்தக்கது. ஷை ஸபை செய்துவரும் வேலையில் இதைவிடச் சிறந்தசொன்றைக் காண முடியாது. இத்தகைய பெரியாரை என்றும் சென்னைவரவேற்றதில்லை.

சாரதாசட்டக் கண்டனம். 5வ மன்னார்குடியிலும் 9வ கும்பகோணத்திலும் நாகப்பட்டணத்திலும், மதுரையிலும் 12வ மாயவரத்திலும் சாரதாசட்டத்தைக் கண்டித்து ராஜாபஹதூர் திருத்தத்தை ஆதரித்தன.

நல்ல யோஜனை. 17வ திருச்சி கோரக்ஷண ஸபையார் ஓர் கட்டடம் கட்ட உள்ளூர் கலெக்டரை அஸ்திவாரக் கல் நாட்டச் சொன்னார்கள். இந்தியரான ஷை கலெக்டர் கோரக்ஷணத்தை ச்லாகித்து பணத்தை வீணாகக் கட்டடத்தில் போடவேண்டாமென்றார். கோ மேய்வதற்குத் தான் தர்காஸ்த் நிலங்களைத் தருவதாகக் கூறினார். தர்மத்தின் பெயரால் வீண் ஆடம்பரங்களைச் செய்யாமல் இங்ஙனம் உபதேசிப்பவர் அரிது! இவரது மதாபிமானத்தைக் கொண்டாடுகிறோம்.

கும்பாபிஷேகங்கள். 7வ கும்பகோணத்தில் ஸ்ரீமான் சுந்தரமய்யர் ஆஞ்ஜநேயாலயத்தைக் கட்டி கும்பாபிஷேகம் செய்து

5000-பேருக்கு அந்நதானம் செய்தார். புக்கை க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளது மேற்பார்வையில் வேதோக்தமாக ஓர் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பல்லாயிரம் பக்தர்கள் வந்து தர்சித்தனர். அபாரகாசியான புக்கையில் கைலாஸநாதாவதாரமான ஸ்ரீ சங்கராசார்யாளைத் தர்சித்தவரே பாக்யசாலி ஆவர்.

கோயிலை இடித்துக்குளத்தைத் துக்காதே 12உ கும்பகோணத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடி உள்ளூர் நகரபரிபாலந ஸபையார் செய்யக் கருதும் ஷை காரியத்தைக் கண்டித்தனர். ஷை ஸபையின் கடமையைப்பற்றி பலர் பேசினர். ஆஸ்திகர்வாளாக இருந்தால் நாஸ்திகம் நெடுக்கப் பற்றவும் மற்றும் பல செய்யத்தகாத வேலையையும் செய்துவிடும். ஆஸ்திகர் ஒன்று சேர்ந்து மற்றோருக்கும் கடமையைக் காண்பிக்கின்றனர். தர்ம காரியத்தில் முன்நிற்குமிவர்களைக் கொண்டாடுகிறோம்.

ஆஸ்திகர் வாழ்க! சென்ற விநாயக சதுர்த்தி முதல் ஸைதாப்பேட்டை கடைத்தெருவிலுள்ள ஸ்ரீமான் ராமசந்த்ரய்யர் என்ற ஆஸ்திகசிகாமணி ஓர் பண்டிதரைக்கொண்டு ஸ்காந்தத்தை ஆரம்பித்தார். அவர் ஹைகோர்டில் ஓர் உத்தியோகஸ்தர். மிக ச்ரமப்பட்டு பக்தி ச்ரத்தையுடன் தனது த்ரவ்யத்தையும் நல் விநியோகம் செய்து 20-உபன்யாஸத்தில் தான்மட்டிலுமில்லாமல் ஏனைய ஆஸ்திகரும் அதைக் கேட்கும்படி செய்வது மிக ச்லாகிக்கத்தக்கதே. அன்னவருக்கும் அதற்குதவிபுரியும் மற்றவருக்கும் ஸ்கந்தனருள் சொரிக.

கலியின் குணம். 16உ லாகூரைச் சார்ந்த கோலால்மண்டி என்றவிடத்தில் டேஜு என்பவர் நோய்வாய்ப்பட்டு வைத்யரால் கைவிடப்பட்டிறந்தார். காலையில் முறைப்படி பாடைமீது வைத்து சுடுகாட்டிற்குப் போகும்போது நடுவழியில் ராம் ராம் என்று அவர் எழுந்தார். எவருக்குப் பதிலாகவோ தவறாகத் தான் கொண்டுபோகப்பட்டதாகவும். தன்னைத் திருப்பியனுப்பி துறவியாகும்படியுமங்கு கூறியதாகச்சொல்லி உடனே ஸன்யாஸியானார். கலியுகத்தில் சிகஸ்ஸித்தி உண்டென பெரியாரிதைப் புகழ்வர். ப்ரத்யக்ஷமாகப் பல அத்புதங்களைக் காண்கிறோம். நாஸ்திகர் இப்போதாவது திருந்துவரா?

வே. ஸோமதேவ சர்மா.